**<u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>**

| M.C.O.P. No. 48/2020 | Date : 12.04.2024 | PW1 |
|---|---|---|
| Name: காயத்ரி | W/o. தங்கராஜ் | |
| Evidence Recorded Time: 12.55 P.M. to 01.10 P.M. | | |

**<u>2-ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

விபத்து சம்மந்தமாக போலீசில் யார் புகார் கொடுத்தார் என்றால் என் அண்ணன் தேவராஜ் கொடுத்தார். அவர் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தை கேள்விபட்டு என்னிடம் போன் மூலம் தகவல் சொன்னார் என்றால் சரிதான். என் கணவர் தங்கராஜ் விபத்து சமயத்தில் டிஎன் 52 எஸ்.6091 என்ற வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரிதான். அந்த வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் என் மகனுக்கு சொந்தமானது. இந்த விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளதால் என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்தை உரிமையாளர், அதன் காப்பீட்டாளர்களை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் என்னை விட 6 வயது மூத்தவர் என்றால் சரிதான். 2ம் வாதி யுவராஜ் பொறியியல் பட்டதாரியாக படித்து விட்டு ஐடி நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். 3ம் மனுதாரர் வைஷ்னவி வேலை பார்க்கவில்லை. என் கணவருக்கு தலையில் அடிபட்டது என்றால் சரிதான். என் கணவர் ஹெல்மெட் அணிந்திருந்தால் தலையில் அடிபட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் அவரின் நஷ்டஈடு கணக்கிடும் போது இழப்பீட்டிலிருந்து அதை கழிக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இதுவரை என் கணவரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனை சமர்ப்பிக்க தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை - இல்லை.</u>**

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.